...டோம் 6 மாதத்தில் ...

...நீதிமன்றத்திற்குச் சென்று ஸ்டே (Stay) வாங்குவது போன்றவை வராமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பும் உங்களிடத்தில் இருக்கிறது.

**6 மாதத்துக்குள் நிறைவேற்றுங்கள்**

ஆகவே, இந்தக் கூட்டத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும், அதில் பிரச்சினைகள் ஏதும் ஏற்பட்டுவிடாமல் நிறைவேற்றிட வேண்டும்.

நாம் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துவிட்டோம். அடுத்து நமக்கு இருப்பது 6 மாதங்கள்தான். ஏனென்றால், அடுத்த 6 மாதங்களுக்குப் பிறகு சட்டமன்றத்தில் அடுத்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும். ஆக, இந்த ஆறு மாதத்திற்குள் நாம் செய்துள்ள அறிவிப்புகளைச் செயல்படுத்திட வேண்டும். எனவே, விவேகமாகவும் வேகமாகவும் நீங்கள் காரியங்களை ஆற்றிட வேண்டும்.

**நேரடி கண்காணிப்பு**

நான் இந்த அறிவிப்புகள் செயல்படுத்துவது குறித்து அமைச்சர்களைக் கண்காணிப்பேன் என்று சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்தவுடன் சொல்ல ஆரம்பித்துவிட்டேன். இரண்டு நாட்களாக, நான் செல்கிற நிகழ்ச்சிகளில், கட்சி நிகழ்ச்சிகளாக இருந்தாலும், எந்த நிகழ்ச்சிகளாக இருந்தாலும், நானே நேரடியாகக் கண்காணிக்கப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். எனவே, அமைச்சர்களை மட்டுமல்ல; ஒவ்வொரு துறைச் செயலாளர்களும் இந்த அறிவிப்புகளை குறித்த காலத்திற்குள் முடிக்கக்கூடிய வகையில் என்னுடைய கண்காணிப்பு இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கோவிட் பெருந்தொற்று காரணத்தினால் சில பொருளாதார நெருக்கடிகள் உள்ளதை நீங்களும் அறிவீர்கள், நாங்களும் ... அந்த அறிவிப்புகளின் பலன் மக்களைச் சென்றடைய வேண்டும். அப்போதுதான் நாம் அறிவிப்பை செயல்படுத்தி விட்டோம் என்று அர்த்தமாகும் என்பதையும் நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை.

ஒவ்வொரு அறிவிப்பையும் செயல்படுத்துவதற்கு கால நிர்ணயம் செய்து கொள்ளுங்கள். அந்தக் காலத்துக்குள் நிறைவேற்றுங்கள். அமைச்சர்களும் அதிகாரிகளும் இணைந்ததுதான் இந்த அரசு.

நான் ... தெரிந்துகொள்ள, ... அக்டோபர் மாதம் நான் மீண்டும் ஆய்வு செய்யவிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குள்ளாக தேவையான அரசாணைகளை வெளியிட்டு பணிகளைத் துவக்குவதற்கான நல்ல முயற்சிகளை நீங்கள் ஒவ்வொருவரும் எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு இந்த அரசு உங்களுக்கு எப்போதும் துணை நிற்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் கூறினார்.

# சென்னையில் ஒரே கல்லூரியில் 13 மாணவர்களுக்கு கொரோனா

சென்னை, செப். 16–

வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவ கல்லூரியில் 13 மாணவர்களுக்கு கொரோனா உறுதியாகியுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த செப்டம்பர் 1 ந் தேதி பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட்டன. மாணவர்கள் அதிகளவில் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு சுழற்சி முறையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கொரோனா தடுப்பு நடவடிக்கைகளான மாஸ்க் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல் உள்ளிட்டவை கடுமையாக பின்பற்றப்படுகின்றன. எனினும், சில மாணவர்களுக்கு கொரோனா உறுதியாகிறது.

இந்த நிலையில், சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 13 பேருக்கு கொரோனா உறுதியாகியுள்ளது. மாணவர்கள் அனைவருமே விடுதியில் தங்கிப் படித்த மாணவர்கள் என்றும் அண்மையில் சொந்த ஊர் சென்று திரும்பிய மூன்றாம் ஆண்டு மாணவர்கள் என்றும் கல்லூரி நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தொடர்பில் இருந்த மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் பரிசோதனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

ஏற்கனவே, கோவையில் உள்ள தனியார் நர்சிங் கல்லூரி மாணவர்கள் 46 மாணவர்களுக்கு கொரோனா உறுதியாகியுள்ளது. அந்த கல்லூரியில் கேரளாவில் இருந்து வந்து தங்கிப்படிக்கும் 4 மாணவர்களுக்கு கொரோனா உறுதியானதைத் தொடர்ந்து மற்ற மாணவர்களுக்கும் பரிசோதனை செய்யப்பட்டதில் 46 மாணவர்கள் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# டெல்லியில் பலத்த காற்றுடன் கனமழை

புதுடெல்லி, செப். 16–

டெல்லியில் பலத்த காற்றுடன் கூடிய இன்று காலை கனமழை பெய்தது.

டெல்லியில் மற்றும் டெல்லியை சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்ய கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் ஆரஞ்சு எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்நிலையில் டெல்லியின் பல்வேறு பகுதிகளிலும் இன்று காலை பலத்த காற்றுடன் கன மழை பெய்தது. டெல்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் 2 மணி நேரத்திற்கும் மேலாக மழை பெய்தது.


**விற்பனை அறிவிப்பு**

**ஹால்மார்க் லிவிங் ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட் (கலைப்பில் உள்ளது)**

CIN: U45400TN2012PTC084362

பதிவு அலுவலகம் : அறை - ஏ. எண்.43. பழைய எண்.62/2. யுனைடெட் பிளாசா, உஸ்மான் சாலை. தி.நகர். சென்னை - 600 017.

மனை : 'எமரால்டு', செட்டிபுண்ணியம், ஜிஎஸ்டி சாலை, மஹிந்திரா வேர்ல்டு சிட்டி எதிரில் (ஆர்டிஓ அலுவலகம் அருகில்)

**நொடித்தல் மற்றும் திவால் சட்டத் தொகுப்பு 2016-ன் கீழ் மின்னணு ஏலம்**

IBBI கட்டுப்பாடுகள் 2016. (கலைத்தல் நடைமுறை) விதி 32-ன் கீழ் மெசர்ஸ் ஹால்மார்க் லிவிங் ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட்டிற்கு (கலைப்பில் உள்ளது) சொந்தமான கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்ய கலைப்பாளரை நியமித்து மாண்புமிகு தேசிய கம்பெனிகள் சட்ட தீர்ப்பாயம் (என்சிஎல்டி), சென்னை பெஞ்ச், 17.08.2018 அன்று தேதியிட்ட ஆணையில் உத்தரவிட்டுள்ளது.

விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள், கம்பெனியின் இணையதளம் http:// www.hallmarklivingspace.co.in/-ல் முழுமையான மின்னணு ஏல செயல்முறை தகவல் ஆவணத்தில் உள்ள ஆன்லைன் மின்னணு ஏலம் தொடர்பான விதிமுறை விவரங்கள், மின்னணு ஏல படிவம், தகுதி வரம்பு, ஏலதாரர்களின் அறிவிப்பு உள்ளிட்டவற்றை பார்த்து அறிந்துகொள்ள வேண்டும். மின்னணு ஏல விற்பனை http://ncltauction.auctiontiger.net இணையதளம் மூலம் கூறப்பட்ட மின்னணு ஏல செயல்முறை ஆவணத்திற்கு உட்பட்டு "எது எங்கு அல்லது எப்படி உள்ளதோ, அந்த அப்படியே" என்ற முறையில் ஏல விற்பனை நடத்தப்படும். பொருந்தக்கூடிய ஜிஎஸ்டி மற்றும் பிற வரிகள் கூடுதலாக செலுத்த வேண்டும்.

| சொத்து | பார்வையிடும் நாள் | மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம் | ரிசர்வ் விலை (இந்திய ரூபாயில்) | டெபாசிட் தொகை & கடைசி தேதி | ஏல அதிகரிப்பு தொகை |
| --- | --- | --- | --- | --- | --- |
| எமரால்டு மனையில் உள்ள நிலம் (7.62 ஏக்கர்) மற்றும் முடிக்கப்படாத கட்டிடம் (8,96,137 சதுர அடி) (தோராயமாக) | 18/09/2021 முதல் 08/10/2021 வரை காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | 11/10/2021 மாலை 3.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை | ரூ.99.00 கோடி | ரூ.9.90 கோடி கடைசி தேதி: 08/10/2021 | ரூ.50.00 லட்சம் |

மின்னணு ஏலம் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ள திரு. பிரவீன் தேவர், +91-9722778828, மின்னஞ்சல்: Praveen.thevar@auctiontiger.net அல்லது nclt@auctiontiger.net - ல் தொடர்பு கொள்ளலாம். விற்பனை தொடர்பான மேலும் விவரங்களை அறிந்து கொள்ள கீழ்க்கையொப்பமிட்டவரை தொடர்பு கொள்ளலாம் அல்லது csdhanapal.ibc@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

S. தனபால்
ஹால்மார்க் லிவிங் ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட்டிற்கான (கலைப்பில் உள்ளது) கலைப்பாளர்
Reg.No- IBBI/IPA-002/IP-N00060/2017- 18/10112
அறை எண். 103, முதல் மாடி, காவேரி காம்ப்ளக்ஸ்,
96/104, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை (நபார்டு & வள்ளுவர் வங்கி அருகில்)
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034. தொலைபேசி : 044 - 4553 0256/0257
செல்பேசி : 09677022712, மின்னஞ்சல் : csdhanapal.ibc@gmail.com

தேதி : 16.09.2021
இடம் : சென்னை


சேவை
றயினர்
களுக்கு
குமாறு
ய்து –
உயிரை
ண்டாம்
கஞ்சிக்
வாழ்ந்து
வ்வாறு
நம்
க
பாரிக்கும்
டு ஆய்வு
துணை
எஸ்.
துணை
சிங்
பறியாளர்
ாண்மை)
ற்பார்வை
, வீரப்பன்
எஸ்.சக்தி
யாளர்கள்